11th September 1959] [Sri C. Subramaniam]

As regards the money order commission, the liability to Government would be very large if this were not deducted from the salaries of the teachers and were to be met by Government. However Government are considering whether it would be possible to devise alternative arrangement for the disbursement of salaries to teachers, which will involve no loss to the teachers and no large expenditure to Government.

Regarding point 3, Government's orders are that elementary school teachers whose salaries are to be disbursed direct by the department should be paid the salary actually drawn by them before direct payment was introduced or the salary fixed on the Government scale of pay, whichever is less. Thus the salary payable to the teacher on the Government scale of pay, taking his actual service into consideration, has first to be determined. Since this involves the verification of the services of all the teachers to whom direct payment has to be made, it has taken some time for the staff of the Education Department to complete this work. Pending this verification, salaries calculated on the approved scale was disbursed. Instructions have been issued that verification of service particulars should be completed by the end of August and the salary payable by Government calculated. It is, therefore, expected that the salaries calculated on the basis of Government's instructions will be paid from this month onwards and that arrears, if any, due on this basis for June and July will be disbursed along with the pay for August.

IV.—AMENDMENT TO THE MADRAS MONEY LENDERS RULES, 1959.

MR. SPEAKER : The hon. Member Sri K. Sattanatha Karayalar has given notice of an amendment to the rules framed under the Madras Money Lenders Act, 1957. He will move it now.

SRI K. SATTANATHA KARAYALAR : I move—

"That the following amendment be made to the Madras Money Lenders Rules, 1959, issued in G.O. Ms. No. 2823, Industries, Labour and Co-operation, dated 15th July 1959, and published in *Fort St. George Gazette*, dated 29th July 1959, and laid on the table of the House on 1st September 1959 :—

AMENDMENT.

In sub-rule 2 of rule 4 of the Madras Money Lenders Rules, 1959, *for* the figures "35" and "25", *substitute* the figure "10".

SRI D. S. AUTHIMOOLAM : I second the amendment.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த லேவாதேவிக்காரர்கள் சட்டத்தில் கொடுத்திருக்கும் திருத்தம் அவர்கள் லைசென்ஸ் எடுக்க

[Sri K. Sattanatha Karayalar] [11th September 1959

வேண்டிய வழி முறைகளைப்பற்றியும், அவர்கள் எவ்வளவு ரூபாய் கட்டவேண்டும் என்பது பற்றியதுமாகும். 4-வது விதி 3-வது பிரிவில் லைசென்ஸ் "பீஸ்" 35 ரூபாய் என்றும் புதுப்பிக்க 25 ரூபாய் என்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பிரிவு 4-ல் கெஜட் பிரசுரமாகி 3 மாத காலம் வரை 10 ரூபாய் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. அதையே நிரந்திரமாக்கிவிட்டால் போதும். இதை நகரிலே இருக்கக்கூடிய பெரிய லேவாதேவிக்காரர்களை நான் மனதிலே வைத்துச் சொல்லவில்லை. கிராமாந்திரங்களிலே உள்ள சிறிய லேவாதேவிக்காரர்களுக்கு 25 ரூபாய், 35 ரூபாய் என்று நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடாது. இந்தச் சட்டம் உடனடியாக சென்னையிலே இருக்கக்கூடிய பட்டாணியர்களுக்காக, அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த விதிகளில் இருந்து தப்ப என்னென்ன மார்க்கங்கள் உண்டு என்பதை உணர்ந்து சமீப காலத்தில் புதிய தந்திரங்களைக் கையாளுகிறார்கள். அதிகக் காலதாமதம் இல்லாதபடி அமுலுக்குக் கொண்டுவந்து அவர்களைப் பொறுத்த மட்டில் எப்படிக் கட்டுப்படுத்த வேண்டுமோ அதைச் செய்ய வேண்டியதுதான். இந்தத் திருத்தத்தைப் பொதுவாக சாதாரண மனிதர்களைப் பொறுத்தமட்டில், கிராமாந்திரங்களில் வாழக்கூடியவர்களுக்கு "பீஸ்" என்று சொன்னால் 2 ரூபாய், 5 ரூபாய் என்றால் பாதகம் இல்லை. ஆனால் இப்பொழுது போடப்பட்டிருக்கும் ரூபாய் ஒரு தீர்வை போல்—டாக்ஸ் போல்—இருக்கிறது. குறைந்த அளவு 10 ரூபாய் என்று இருக்குமானால் நன்றாக இருக்குமென்று இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். மசோதா இந்தச் சபையில் விவாதத்தில் இருந்தபோதுகூட இதைப்பற்றி என் போன்றவர்கள் சொன்னோம். அந்தச் சமயத்தில் அமைச்சர் அவர்கள் இந்த இலாகா ஏற்படுத்த இருக்கும் காரணத்தினால் அதன் செலவை ஈடு செய்ய ஒரு கட்டணம் விதிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி விதிக்கவேண்டிய கட்டணம் கரையாளர் அவர்கள் சொன்னது போல் செலவுக்கு ஈடு செய்யும் அளவுக்கும் அதிகப்படியான அளவாக வைத்திருக்கிற காரணத்தினால் அதிலிருந்து "எவேட்" செய்வது அதிகமாக இருக்கிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் சிறு லேவாதேவிக்காரர்கள்தான். அவர்கள் சமீபத்தில் மாநாடு நடத்தி இதுபற்றித் தீர்மானங்கள் அனுப்பியிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்தமாதிரி சிறிய லேவாதேவிக்காரர்கள் சாதாரணமாக கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகப்படியான ஒரு கட்டணத்தை விதிப்பது அவசியம் இல்லையென்று ஏற்கனவே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள்கூட "not exceeding one hundred rupees" என்று சொல்லியிருக்கிறது; அதற்குக் குறைவாக விதிப்போம் என்று உறுதி கொடுத்தார்கள். அந்த உறுதியின் அடிப்படையிலே இந்தக் கட்டணத்தைக் குறைத்து, வேண்டுமானால் பெரிய லேவாதேவிக்காரர்களுக்கு

11th September 1959] [Sri S. Lazar]

அதிகப்படியாக விதித்தாலும், சிறிய லேவாதேவிக்காரர்களுக்குக் குறைக்கவேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கின்றேன். இதர ராஜ்யங்களில் லைசன்ஸ் கட்டணம் குறைந்த அளவில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பம்பாய் மணி லெண்டர்ஸ் சட்டத்தில் லைசன்ஸ் கட்டணம் ஐந்து ரூபாய் என்றும், ரென்யூவல் கட்டணம் கிடையாது என்றும் இருக்கிறது. சென்ட்ரல் ப்ராவின்ஸஸ் அண்டு பீரார் சட்டத்தில் ரூபாய் 18 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் மணி லெண்டர்ஸ் ஆக்டில் ரூபாய் 5 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பெங்கால் சட்டத்தில் ரூபாய் 15 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பிற ராஜ்யங்களில் உள்ளதுபோல் நம் ராஜ்யத்திலும் அதற்கேற்ப அமைக்கவேண்டுமானல், கட்டணத்தைச் சிறிது அளவு குறைக்கவேண்டும். பத்து ரூபாய் அளவுக்குக் குறைப்பது நியாயமாக இருக்கும். சில்லரை லேவா தேவிக்காரர்களும் இருக்கலாம். ஆகையால் பத்து ரூபாயாகக் குறைப்பதை நான் ஆதரிக்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இது முதலில் கிராமங்களில் அமுலுக்கு வராது. நகரங்களிலும் முனிசிபாலிடிகளிலும்தான் முதலில் அமுலுக்கு வரும். ஆகவே, கிராமாந்திரங்களில் இருப்பவர்களுக்காகப் பரிந்து இப்பொழுது பேசவேண்டியதில்லை.

இந்தக் கட்டணம் ரூ. 100 என்று சட்டத்திலே ஒரு வரம்பு கொடுத்திருந்தது. அது அதிகம் என்று சொல்லப்பட்டது. அப்பொழுதே நான் சொன்னேன், இது வரம்பாக இருக்கிறது, இதைக் குறைத்து ஒரு தொகை நிர்ணயிக்கப்படும் என்று. குறைக்கும் விதத்திலே மூன்றில் இரண்டு பங்கு குறைத்திருக்கிறேம். மூன்றில் ஒரு பங்குதான், ரூ. 35 என்று வைத்திருக்கிறேம். நிர்வாகச் செலவு முதலியவற்றைப் பார்த்தால் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் லேவாதேவி செய்ய முடியும். அவர்களுக்கு இந்தக் கட்டணம் ரொம்ப அதிகமாக இருக்காது. பத்து ரூபாய் விஷயம் தற்காலிகமாகக் கொடுத்திருக்கிறது. குறைவாக இருக்கிறதே என்று ரிஜிஸ்தர் செய்வதற்கு முனைந்து வருவார்கள். 'என்க்கரேஜ்' பண்ணுவதற்காக பத்து ரூபாய் என்று வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 50, ரூ. 45 என்று வைக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், குறைத்து, ரூ. 35, ரூ. 25 என்று வைத்திருக்கிறேம்.

பம்பாயில் கட்டணம் குறைவாக இருக்கிறது என்று சொன்னர்கள். அங்கு லேவாதேவி வியாபாரம் அதிகமாக இருப்பதால் கட்டணம் ஜாஸ்தி வைக்காவிட்டாலும், அதிகமான தொகை

[Sri M. A. Manickavelu] [11th September 1959

வந்துவிடலாம். இதிலே பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதிலே கட்டணம் அதிகமாக இல்லை. இரண்டு பங்கு குறைத்து, ஒரு பங்குதான் இதிலே போட்டிருக்கிறது.

MR. SPEAKER : The question is :

" That the following amendment be made to the Madras Money Lenders Rules, 1959, issued in G.O. Ms. No. 2823, Industries, Labour and Co-operation, dated 15th July 1959 and published in *Fort St. George Gazette*, dated 29th July 1959 and laid on the table of the House on 1st September 1959 :—

AMENDMENT.

In sub-rule (2) of rule 4 of the Madras Money Lenders Rules, 1959, *for* the figures " 35 " and " 25 ", *substitute* the figure " 10 ".

The motion was put and lost.

V.—GENERAL DISCUSSION ON THE FIRST STATEMENT OF SUPPLEMENTARY DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN 1959-60.

MR. SPEAKER : இன்றையதினம் ஸப்ளிமெண்டரி பட்ஜெட் மீது விவாதம் நடைபெறும். கனம் அங்கத்தினர்களில் பலர் திருத்தங்களைக் கொடுத்திருப்பதைப் பார்த்தால், இதில் என்ன பேசலாம் என்று கவனிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகையால், இது சம்பந்தமாக உள்ள சட்டசபை விதியைப் படிக்க சபை அனுமதி கொடுக்குமென்று நம்புகிறேன். விதி 160 கூறுவதாவது—

' The demands for supplementary or additional grants shall be dealt with as if they were demands for grants :

Provided that the discussion of a demand for a supplementary or additional grant shall be confined to the details of which it is composed.' இதைத்தான் கனம் அங்கத்தினர்கள் புரிந்துக் கொள்ளாமல் பழைய பட்ஜெட்டிலே இருக்கிற மான்யக் கோரிக்கைக்கெல்லாம் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தந்த மான்யக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படும்போது, எது ஏற்கத் தகாதது என்று சொல்கின்றேன். பொது விவாதத்திலே கலந்துக் கொள்ளும் கனம் அங்கத்தினர்கள், ஸ்டேட்மெண்டிலே என்ன இருக்கின்றனவோ அவைகளைக் குறித்துத்தான் பேசவேண்டும். பொது விவாதம்போல் நடத்தக்கூடாது. Now we will have general discussion. When the amendments come up, I will say which amendments are in order and which are not. I think two hours will be sufficient. The Hon. Minister will begin his reply at 11-45 a.m.

SRI D. S. AUTHIMOOLAM : மூன்று மணி நேரமாவது இருந்தால் நல்லது.